II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 11 of 2021**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 02.09.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Selvi | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>1 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=</u>

எனது குடும்ப அட்டையில் குறிப்பிப்பட்டுள்ள முகவரியான எண்.8, குளக்கரை தெரு, திருவள்ளூரில் தான் தற்போது நான் குடியிருக்கிறேன். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள முகவரியில் நான் வசிக்கவில்லை என்றால் சரிதான். அது என் அம்மாவிடாகும். நான் அனைத்து வாதிகள் சார்பாகவும் தான் சாட்சியம் அளிக்கிறேன். 1ம் வாதி கருணாகரன் இன்று நீதிமன்றத்திக்கு வந்துள்ளார். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. எத்தனை சர்வே எண்ணில் வழக்கு சொத்து வருகின்றது என்று எனக்கு தெரியவில்லை. வழக்குரையோடு தாக்கல் செய்யப்படுள்ள வரைபடத்தை பற்றி எனக்கு தெரியும். அதை பற்றி என்னிடம் கண் கண்ணாடி இல்லாதால் தற்போது சொல்ல இயலவில்லை. வழக்கு சொத்து சர்வே எண் 77ன் பகுதி என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. வழக்கு அ அட்டவணை சொத்து சர்வே எண். 77 (3) பி-யில் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. பி அட்டவணை சொத்து சர்வே எண். 77 (4) பி-க்கு உட்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. மாரிமுத்து நாயக்கர் எனது தாத்தா. அவருக்கு பலராமன் நாயக்கர், கண்ணப்ப நாயக்கர் என்று இரண்டு மகன்கள்இருந்தனர். நான் கண்ணப்ப நாயக்கர் வரிசுகள் ஆவோம். 14 முதல் 19 பிரதிவாதிகள் பலராமனின் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண்கள் 1980ம் ஆண்டிலேயே 77 ஆக மாற்றப்பட்டுவிட்டது என்றும் ஆனால் நாங்கள் பழைய சர்வே எண்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல்

செய்துள்ளோம் என்றால் எனக்குத் தெரியாது. என் தம்பி கருணாகரனுக்குத் தான் தெரியும். மாரிமுத்து நாயக்கரின் மனைவி பெயர் ராஜேஸ்வரி ஆகும். மாரிமுத்து நாயக்கர் எப்போது இறந்தார் என்று எனக்குத் தெரியாது. கண்ணப்ப நாயக்கர் 01.01.2012 ல் காலமானார். என் தாயார் பெயர் கௌரியம்மாள். அவருக்கு வேறு பெயர்கள் கிடையாது. மாரிமுத்து நாயக்கரின் மனைவி ராஜேஸ்வரிக்கு வேறு பெயர் உள்ளதா என்று எனக்கு தெரியாது. மாரிமுத்து நாயகருக்க இரண்டு மனைவிகள் இருந்தனர். இன்னோரு மனைவி பெயர் குப்பம்மாள். குப்பம்மாளுக்கும் வேறு பெயர் இல்லை. லட்சுமியம்மாள் என்பது எனது ஆயா ஆகும். அவர் எந்த வகையில் ஆயா என்று எனக்குத் தெரியாது. வழக்கு சொத்தின் அகலம் சுமாராக 25 அடி இருக்கும். நீளம் 200 அடி இருக்கும். தாவா சொத்தில் ஒரு ஓட்டுவீடு உள்ளது என்றால் காலி மனையும் ஓட்டு வீடும் உள்ளது. அந்த ஓட்டு வீடு நடுவில் உள்ளது. இரண்டு அறைகள் கொண்டது. வரைபடத்தில் ஓட்டு வீடு வடக்கு பக்கம் கடைசியாக உள்ளது என்றால் சரியல்ல. வரைபடத்தில் அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் அது தவறாகும். கண்ணப்பனும் பலராமனும் ராமலிங்க நாயக்கர் மற்றும் பலர் மீது அ.வ.எண்.680/1988 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தனர் என்றால் சரிதான். அந்த வழக்கு 19.01.1998ல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் அதன் மீது மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்கும் இதே வழக்கு சொத்தை பொருத்தது தான் என்றால் சரிதான். 1 முதல் 13 பிரதிவாதிகள் ராகவநாயக்கரின் பேரப்பிள்ளைகள் என்றால் சரிதான். ராகவநாயக்கருக்கு எத்தனை பிள்ளைகள் என்று தெரியாது. செல்லபெருமாள் நாயக்கர் ராகவ நாயக்கரின் மகன் என்றால் எனக்குத் தெரியாது. ராமலிங்கம், கணேசன், வேணுகோபல் ஆகியோர் ராகவநாயக்கரின் பேரன்கள் என்றால் சரிதான்.

(இந்நிலையில் 1 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).